2026 ஆகஸ்ட் மாதம் 06– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 4/2025

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 (LW1) – சரஸ்வதி |
| கணவர் பெயர்: | மொக்கைப்பாண்டி |
| ஊர்: | சின்ன ஓவுலாபுரம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 60 |

06.08.2026

(எதிரி நீதிமன்ற காவல் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்ன ஓவுலாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். 2024 ம் வருடம் 2 ம் மாதம் தேதி ஞாபகமில்லை இரவு 7 மணியளவில் ஆஜர் எதிரி என்னிடம் ரூ.50,000/– செய்முறைக்காக கேட்டார். நாங்கள் ரூ.50,000/– செய்முறை செய்தோம். கடந்த 2024 ம் வருடம் 2 ம் வருடம் எதிரி மீண்டும் என்னிடம் ரூ.10,000/– கேட்டார், நான் பணம் இல்லை என்று கூறிவிட்டேன். மீண்டும் எதிரி எனது கணவர் மொக்கைப்பாண்டியிடம் பணம்

கேட்டு தகராறு செய்தார். ஆஜர் எதிரி எனது கணவர் மொக்கைப்பாண்டியை சூரி கத்தியை எடுத்து இடது பக்க விலா எலும்பு, இடது பக்க தோள்பட்டை, வலது பக்க வயிற்று ஆகிய பகுதிகளில் குத்தினார்.

2. நான் உடனே வந்துவிட்டேன். குத்திவிட்டு எதிரியான எனது மகன் ஓடிவிட்டார். உடனே நான், முத்துப்பாண்டி, மாவீரன் ஆகியோர் வந்துவிட்டோம். நான், முத்துப்பாண்டி, மாவீரன் ஆகியோர் ஆம்புலன்ஸ் மூலம் சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு எனது கணவரை அழைத்துச் சென்றோம். எதிரி குத்தியதினால் எனது கணவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு, ரத்தப்போக்கு ஏற்பட்டது. சார்பு ஆய்வாளர் நாங்கள் மருத்துவமனையில் இருந்தபோது, என்னை விசாரித்தார்கள். சார்பு ஆய்வாளர் நான் சம்பவம் குறித்து நடந்த விபரங்களை சொல்ல சொல்ல எழுதினார்கள், அதை படித்துக் காண்பித்து புரிந்து கொண்ட பின் நான் அதில் கையொப்பம் செய்தேன்.

3. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சூரி கத்தி சம்பவத்தின்போது எதிரி பயன்படுத்திய கத்தியாகும். அது **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வெள்ளை நிற இரத்தக்கறை படிந்த சட்டை எனது மகன் சம்பவத்தின்போது அணிந்திருந்த சட்டையாகும். அது **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது கணவர் சம்பவத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு உள்நோயாளியாக தேனி, க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சுமார் 20 நாட்களாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். சம்பவத்திற்கு பின்னிட்டு அவரால் சரியாக வேலை செய்ய இயலவில்லை. வேலை செய்தால் குடல் பகுதியில் வலி ஏற்படுவதாக கூறுகிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

4. நாங்கள் இப்போது சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல, ஒத்தி வீட்டில் வசித்து வருகிறோம். சம்பவத்தின்போது இருந்த ஒத்தி

வீட்டில் தான் தற்போதும் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சின்னமனூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு எதிரி ரூ.50,000/– கேட்டு தகராறு செய்து மிரட்டினார் என்பதற்கு புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

5. புகார் வாக்குமூலத்தில் ரூ.5,000/– ஏற்பாடு செய்து கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 25.02.2024 ம் தேதி மீண்டும் ரூ.10,000/– கேட்டு தகராறு செய்ததாக புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. செய்முறைக்கு பணம் கேட்டு, கொடுக்காவிட்டால் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாக புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த தேதி 26.02.2024 ம் தேதி என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை, 2 வது மாதம், 2024 ம் வருடம் நடைபெற்றது. இரவு 7 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டு புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6. எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் 7.30 மணிக்கு சின்னமனூர் மருத்துவமனைக்கு சென்றோம், அங்கிருந்து க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு 8.00 மணிக்கு சென்றோம். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை எத்தனை மணிக்கு எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சின்னமனூர் அரசு மருத்துவமனையில் நேரம் ஞாபகமில்லை. புகார் கொடுக்கும்போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான், முத்துப்பாண்டி, மாவீரன் ஆகியோர் இருந்தோம். இருவரும் நாங்கள் சென்ற ஆம்புலன்ஸில் எங்களுடன் வந்தார்கள் என்றால் சரிதான்.

7. புகார் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் யாரும் இடவில்லை என்றால் சரிதான், நான் கையொப்பம் செய்தேன். நான் சொல்வதுபோல் முத்துப்பாண்டி, மாவீரன் ஆகியோர் மருத்துவமனையில் இல்லை என்றாலும், இருந்திருந்தால் புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எனது கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் வீட்டிற்குள் இருந்து சத்தம் கேட்டு சம்பவத்தை வந்து பார்த்தேன் என்றால் சரிதான், பக்கத்தில் இருந்தேன். எதிரி எங்கள் சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

8. செய்முறைக்காக ரூ.50,000/- கேட்டு, செய்முறை சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மாவீரன் எனது கணவரின் தங்கை மகன் என்றால் சரிதான். மாவீரனின் வீடு எங்குள்ளது என்றால் இந்திரா காலனியில் உள்ளது. சம்பவ இடத்திற்கும், மாவீரன் வீட்டிற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்குமா என்றால் 1/2 கி.மீ தூரம் இருக்கும், சம்பவத்தின்போது நான் சத்தம் போட்டவுடன் பக்கத்தில் இருந்த டீக்கடையில் இருந்து மாவீரன் வந்தார். டீக்கடையின் உரிமையாளர் பெயர் என்ன என்றால் வெண்டி முத்தன் என்பவருடையது. வழக்கிற்கு முன்பு எதிரி வேறு புகார் நான் கொடுத்ததில்லை என்றால் சரிதான்.

9. தேனி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றபோது, முத்துப்பாண்டி, மாவீரன், ரஞ்சித் ஆகியோர்கள் எங்களுடன் இருந்தார்கள். நான் சொல்வதுபோல் சொன்ன தேதி, மாதம், வருடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி குடியிருக்கும் சொந்த வீட்டிற்கு நாங்கள் குடிபெயர வேண்டி பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சொந்த வீட்டில் தற்போது யார் வசித்து வருகிறார்கள் என்றால் யாரும் வசிக்கவில்லை. நான் தற்போது சொந்த வீட்டில் வசித்து வருகிறேன் என்றாலும், ஒத்தி வீட்டில் வசிக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக ஒத்தி வீட்டில் வசித்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. புகார் வாக்குமூலம் கொடுக்கப்பட்ட சமயத்தில் எனது கணவர் சுயநினைவுடன் இருந்தாரா என்றால் இல்லை, மயக்க நிலையில் இருந்தார். நான் சொல்வதுபோல் எதிரி சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், கெட்ட வார்த்தைகளால் திட்டவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது எனது கணவர் என்ன சட்டை அணிந்திருந்தார் என்றால் எனது கணவர் சட்டை அணியவில்லை. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.08.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.06 18:34:43 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
06.08.2026